**தொழுவுரம் மட்டுமே போதும்,தொடர் வருமானம்**

"குறைவான பராமரிப்பு, குறைவான தண்ணீர், குறைவான சாகுபடிச் செலவு. ஆனால், வருமானம் மட்டும் நிறைவாக இருக்கக்கூடிய பயிர்கள் நெல்லி, சப்போட்டா, மா, கொய்யா, எலுமிச்சை போன்ற தோட்டக்கலைப் பயிர்கள்" என்கிறார் நாற்பது ஏக்கரில் மா, நெல்லி, கொய்யா, சப்போட்டா, எலுமிச்சை, தென்னை என சாகுபடி செய்து வரும் தென்னம்பட்டி முருகேசன்.

தூத்துக்குடி மாவட்டம், கயத்தாரிலிருந்து மணியாச்சி போகும் வழியில் பத்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது தென்னம்பட்டி. பிரதான சாலையிலிருந்து விலகி சிறிது தூரத்தில் வருகிறது, முருகேசனின் பண்ணை.

பாரம்பரிய விவசாய குடும்பம் இவருடையது. சின்ன வயதிலிருந்தே அவரது தந்தையுடன் விவசாயத்தை பார்த்தக் கொண்டிருந்திருக்கிறார். மொத்தம் நாற்பது ஏக்கர் செம்மண் பூமி இருக்கிறது. ஆரம்பத்தில் மிளகாய், கத்தரி, வெண்டை, தக்காளி, சிறுதானியங்கள் என்று குறுகிய காலப் பயிர்களைத்தான் சாகுபடி செய்திருக்கிறார்கள். பின்பு வேலையாள் பிரச்சனை, தண்ணீர் பிரச்சனையால் மரப்பியர் சாகுபடிக்கு மாறிவிட்டார்.

ஆரம்பத்தில் இவரும் ரசாயன விவசாயம்தான் செய்தார். பூமி சூடாகிறது. ஓசோன் ஓட்டையாகிறது என்று சில விஷயங்களைக் கேள்விப்பட்டு இயற்கை விவசாயத்துக்கு மாறிவிட்டார். ஐந்து வருடமாக முழுக்க இயற்கை விவசாயம்தான் என்று மகிழ்ச்சியோடு குறிப்பிடுகிறார்.

இப்போது 10 ஏக்கரில் நாட்டுரகக் கொய்யா: 15 ஏக்கரில் என்.ஏ-7, காஞ்சன், கிருஷ்ணா, பி.கே.ஏம்.2, பி.எஸ்.ஆர்னு எல்லா ரகங்கிலும் நெல்லி: 5 ஏக்கரில் பி.கே.எம்-1 ரக சப்போட்டா: 5 ஏக்கரில் அல்போன்சா, காலப்பாடு, செந்தூரா, நீலம், இமாம்பசந்த் என்று பல ரகங்களில் மா, 5 ஏக்கரில் நாட்டு ரக எலுமிச்சை இருக்கிறது. வரப்போரம் தென்னை வைத்திருக்கிறார். முழுக்க சொட்டு நீர் போட்டிருக்கிறார். எல்லா பயிர்களுக்கும் பராமரிப்பு ஒன்றுதான். சோதனைக்காக கொஞ்சம் சாத்துக்குடியையும் நடவு செய்திருக்கிறார்.

ஏலுமிச்சை நட்டு இரண்டரை வருஷம் ஆகிவிட்டது. மா, சப்போட்டா நட்டு மூன்று வருடம் ஆகிறது. கொய்யா, நெல்லி.. நான்கு வருடம் ஆகிறது. இயற்கைக்கு மாறியதுக்கு பின்பு உடை மரமாயிருந்த காட்டு பூமி இப்போது நன்றாக இருக்கிறது என்கிறார். ஒரு சொட்டு ரசாயன உரம்

கூட தோட்டத்துக்குள் வந்திடக்கூடாது என்று கவனமாக இருப்பதால் தோட்டத்தில் பூச்சி நோய் தாக்குதல் இல்லை. என்ற முருகேசன் மரப்பயிர் சாகுபடித் தொழில்நுட்பங்களைச் சொல்கிறார்.

மரப்பயிர்களை நடவு செய்ய புரட்டாசி மாதம் ஏற்றது. சட்டிக் கலப்பையால் ஒரு உழவு செய்து நிலத்தை 30 நாட்கள் ஆற விட வேண்டும். பிறகு ஒரு வார இடைவெளியில் இரண்டு முறை டில்லர் மூலம் உழ வேண்டும். எந்தப் பயிராக இருந்தாலும், இரண்டரை அடி சதுரம் இரண்டரை அடி ஆழத்துக்கு குழி எடுத்துக் கொள்ள வேண்டும்.

எலுமிச்சைக்கும் நெல்லிக்கும் 21 அடி இடைவெளியில் குழி எடுக்க வேண்டும். ஏக்கருக்கு 100 கன்றுகள் தேவைப்படும். கொய்யாவுக்கு 18 அடி இடைவெளி தேவை. ஏக்கருக்கு 130 கன்றுகள் வரை தேவைப்படும்.

இந்த இடைவெளியில் வழக்கத்தை விடக் கூடுதலானவைதான். ஆனால், அதிக இடைவெளி கொடுத்து பயிர்களை நடவு செய்யும் போது நல்ல பலன் கிடைக்கிறது. அதிக இடைவெளி விடும் போது போதுமான சூரியஒளி கிடைப்பதோடு, பக்கக் கிளைகளும் அதிகமாக வெடித்து வரும். அதன் மூலம் மகசூல் அதிகமாகக் கிடைக்கும்.

தேவையான அளவு இடைவெளியில் குழிகளை எடுத்த பிறகு, ஒவ்வொரு குழியிலும் 100 கிலோ களிமண், 25 கிலோ தொழுவுரம், சிறு சிறு துண்டுகளாக வெட்டிய இரண்டு சோற்றுக் கற்றாழையைப் போடுவதால் வேர்பபூச்சிகள் தாக்குவதில்லை.

பிறகு சொட்டு நீர்ப் பாசனம் அமைத்துக் கொண்டு பத்து நாட்கள் தினமும் குழியை நனைய விட வேண்டும். பிறகு குழியின் மத்தியில் ஒரு அடி ஆழத்துக்குப் பறித்து, கன்றுகளை நடவு செய்து, மேல் மண்ணைக் கொண்டு மூடி, வட்டப்பாத்தி அமைக்க வேண்டும். நடவு செய்த ஆறாவது மாதத்தில் ஒவ்வொரு கன்றுக்கும் இரண்டு கிலோ தொழுவுரம் இட வேண்டும். மரத்தின் வளர்ச்சியைப் பொறுத்து, தொழுவுரத்தின் அளவைக் கூட்டிக் கொள்ள வேண்டும்.

நடவு செய்த நான்காவது மாதம் நெல்லி பூக்கத் தொடங்கும். முதல் மூன்று ஆண்டுகள் வரை அந்தப் பூக்களை உதிர்த்து விட வேண்டும். அதன் பிறகு காய்க்கவிட்டால் அதிக மகசூல் கிடைப்பதோடு, காய்களும் ருசியாக இருக்கும். நெல்லியில் வெயில் காலங்களில் 'எருக்களைப் பூச்சி' என்ற ஒரு வகைப் பூச்சிகளின் தாக்குதல் வரலாம். அப்போது மரத்தின் அடிப்பாகம் வெண்மையாக மாறிவிடும். அந்த மரங்களின் மீது 13 லிட்டர் தண்ணீரில், 50 மில்லி வேப்பெண்ணையைக் கலந்து தெளிக்க வேண்டும். அதற்குக் கட்டுப்படாவிட்டால் 13 லிட்டர் தண்ணீரில் 50 கிராம் மைதா மாவு, 25 மில்லி வேப்பெண்ணெய் ஆகியவற்றைக் கலந்து தெளிக்க

வேண்டும். நெல்லியில் பிப்ரவரி மாதம் முதல் மே மாதம் வரை ஒரு முறை: ஜீலை மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை ஒரு முறை என ஆண்டுக்கு இரண்டு முறை அறுவடை செய்யலாம்.

கொய்யா, நடவு செய்த இரண்டாவது ஆண்டில் இருந்து பலன் கொடுக்கத் தொடங்கும். ஆண்டுக்கு ஒன்பது மாதங்கள் மகசூல் எடுக்கலாம். ஒவ்வொரு அறுவடை முடிந்ததும் பக்கக் கிளைகளைக் கையால் கிள்ளி விட வேண்டும்.

சப்போட்டா மூன்றாவது ஆண்டிலிருந்து காய்க்கத் தொடங்கும். அதேபோல் மாமரமும் மூன்றாம் ஆண்டிலிருந்துதான் காய்க்கத் தொடங்கும். நாட்டு எலுமிச்சையில் இரண்டாவது ஆண்டிலிருந்தே மகசூல் கிடைக்கத் தொடங்கினாலும் ஐந்தாம் ஆண்டுக்கு மேல்தான் நல்ல மகசூல் கிடைக்கும். சாகுபடியை முடித்த முருகேசன் வருமானம் பற்றிச் சொல்லத் தொடங்கினார்.

“கொய்யாவில் ஒரு மரத்தில் வருடத்துக்கு 100 கிலோ காய்க்கு மேல் கிடைக்கிறது. பத்து ஏக்கரில் இருக்கின்ற 1200 மரங்களிலிருந்து வருடத்திற்கு 120 டன் வரை காய் கிடைக்கிறது. குறைந்தபட்சமாக கிலோவுக்கு 6 ரூபாய் விலை கிடைக்கிறது. அதன் மூலமாக வருடத்திற்கு 7 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது.

நெல்லியில் போன வருடம் 25 டன் மகசூல் கிடைக்கிறது. இந்த வருடம், வருடத்திற்கு இரண்டரை லட்சத்திற்கு குத்தகைக்கு விட்டுள்ளதாக கூறுகிறார். சப்போட்டாவில் வருடத்திற்கு 5 டன் வரை மகசூல் கிடைக்கும். எப்படியும் சராசரியாக கிலோவுக்கு 5 ரூபாய் விலை கிடைக்கிறது.

மா, எலுமிச்சை இரண்டும் இப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாக காய்க்க ஆரம்பித்திருக்கிறது. நெல்லி கொடுக்கிற வருமானமே வயல் பராமரிப்புக்கும், வேலையாள் சம்பளத்துக்கும் போதுமானதாக இருக்கிறது. மீதி கிடைப்பது எல்லாமே இலாபம் தான். இப்போதைக்கு 40 ஏக்கரில் இருந்து வருடத்திற்கு 9 லட்ச ரூபாய் வரை வருமானம் கிடைக்கிறது. எல்லாம் காய்க்க ஆரம்பித்துவிட்டால் கண்டிப்பாக இதைப் போல இரண்டு மடங்கு வருமானம் கிடைக்கும் என்கிறார் முருகேசன்.

**தொடர்புக்கு:**

முருகேசன்
அலைபேசி : 98421 46454

**ஆதாரம் :** www.vikatan.com பசுமை விகடன் வெளியீடான தேதி, 10.8.11